
# 50 நாடுகளை அறியுங்கள்




சு. துரைசிங்கம், துரையர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 நாடுகளை அறியுங்கள்

சு. துரைசிங்கம்

துரையர்

ஆண்டு 7 மாணவர்கள் தொடக்கம்
பல்கலைக்கழக மாணவர் வரை
பயன்படுத்தக்கூடிய நூல்

கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம்

பாமா பதிப்பகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந்நூல் எமது ஆசிரியரும்
கல்விமானும் பேராசிரியருமாகிய மறைந்த
**திரு. ப. சந்திரசேகரம்**
அவர்களுக்குச் சமர்ப்பணம்


முதற்பதிப்பு: 1991

AMBATHU NADUCALAI ARIUNGAL
By. S. THURAISINGAM
BHAMA PATHIPPAKAM
118, STATION LANE
CHUNNAKAM EAST
CHUNNAKAM

ஒவ்செற் அமைப்பு: S. சுப்பிரமணியம், (தவம்)

அச்சுப்பதிவு: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,
பிரதானவீதி, யாழ்ப்பாணம்

கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம் புத்தக நிலையம்,
யாழ்ப்பாணம்.

தனலக்குமி புத்தக நிலையம்,
சுன்னாகம்.

துர்க்கா ஸ்ரேசனேஸ்
சுன்னாகம்.

விலை ரூபா 41 0(


# பொருளடக்கம்


1. முன்னுரை
2. வளர்ந்த கதை
3. இவர்கள் பார்வையில்
4. அவுஸ்திரேலியா
5. அவுஸ்திரியா
6. இந்தியா
7. இந்தோனேசியா
8. இத்தாலி
9. இலங்கை
10. ஈரான்
11. ஈராக்
12. எகிப்து
13. ஐக்கிய அமெரிக்கா
14. கனடா
15. கயானா
16. கம்போடியா
17. கிறீஸ்
18. கியூபா
19. கிழக்கு ஜேர்மனி
20. சவுதி அரேபியா
21. சிங்கப்பூர்
22. சீனா
23. சுவீடன்
24. செக்கோசிலாவாக்கியா
25. சோமாலி
26. தாய்லாந்து
27. துருக்கி
28. தென்னாபிரிக்கா
29. நியூசிலாந்து
30. நேபாளம்
31. நைஜீரியா
32. நோர்வே
33. பர்மா
34. பாகிஸ்தான்
35. பிரித்தானியா
36. பிரான்ஸ்
37. பிரேசில்
38. பிலிப்பைன்ஸ்
39. பூட்டான்
40. பெல்ஜியம்
41. போர்த்துக்கல்
42. போலந்து
43. மலேசியா
44. மாலைதீவு
45. மெக்சிக்கோ
46. மேற்குஜேர்மனி
47. யப்பான்
48. யூகோசிலாவியா
49. லிபியா
50. வங்காளதேசம்
51. வியட்நாம்
52. ரூசியா
53. ஸ்பெயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்றைய உலகிலே எந்த ஒரு நாடும் தனித்துவாழ முடியாது. பொருளாதார அரசியல் நிலைகள் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பையும், உதவியையும் வற்புறுத்துகின்றன. விஞ்ஞான முன்னேற்றங்கள் அவற்றைச் சாத்தியமாக்கி, விரைவுபடுத்துகின்றன. போக்குவரத்துச் சாதனங்களும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் நாடுகளுக்கிடையேயுள்ள இடைவெளியைக் குறுகச்செய்து வருகின்றன.

இவ்வுலகில் வாழ்வதற்கும், முன்னேறுவதற்கும் ஏனைய நாடுகளைப் பற்றிய அறிவும் விளக்கமும் இன்றியமையாதவை. நமது பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புக்களிற் கற்பிக்கப்படும் ''சுற்றாடற்கல்வி'' இடைநிலை வகுப்புகளிற் ''சமூகக் கல்வி''யாகி இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்றது. மனிதன், குடும்பம், சூழல், கிராமம், பிரதேசம், நாடு, அயல் நாடுகள், உலகம் — என மாணவர்களின் அறிவு படிப்படியாக விரிவடைகின்றது.

உலகிலுள்ள பல நாடுகளைப் பற்றிய முக்கியமான தகவல்களை இலகுவாக மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு ''ஐம்பது நாடுகளை அறியுங்கள்'' என்ற இந்நூல் பெரிதும் உதவும். தரமான நூல்களின் துணைகொண்டும், அறிஞர்களுடனும் வெளிநாட்டுத் தூதரங்களுடனும் தொடர்பு கொண்டும் திரு. சு. துரைசிங்கம் அவர்கள் மிகப் பிந்திய சரியான தகவல்களைத் திரட்டித் தந்துள்ளார்கள். நாட்டுப் படங்கள், ஒவ்வொரு நாட்டின் தனித்துவத்தையும் பிரதிபலிக்கும் சின்னங்கள், முத்திரைகள் போன்றவை, காட்சி வாயிலாக மாணவர்களின் கருத்திற் பதியும்வண்ணம் சேர்க்கப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு மாணவரிடமும் ஆசிரியரிடமும் இருக்கவேண்டிய கைநூலாக இதைத் தயாரித்த அதிபர் திரு. சு. துரைசிங்கம் அவர்களைப் பாராட்டுகின்றேன். இத்தகைய பயன்மிக்க பணிகளிற் தொடர்ந்து ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வெ. சபாநாயகம்
இணைச்செயலர்

கல்வி அமைச்சு
கொழும்பு.

## இவர்கள் பார்வையில்

''பார்த்ததும் வாங்கத் தூண்டுகின்ற,
வாங்கியதும் படிக்கத் தூண்டுகின்ற,
படித்ததும் போற்றிப் பாதுகாக்கத் தூண்டுகின்ற,
ஒரு நூலாக இந்நூல் விளங்குகிறது.''

பொ. சண்முகநாதன் (எழுத்தாளர்)

ஐம்பது நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக, பௌதீக
இயல்புகளையும் அறிந்துகொள்வதற்கு மாணவர்களுக்கு
வழிகாட்டுகின்றது

க. சுந்தரலிங்கம் (சமூகக்கல்வி ஆசிரியர்)

பல நூல்களில் பலநாட்கள் தேடிப்பெறவேண்டிய
முக்கிய விடயங்களை ஒரே பார்வையில் தெளிவாக
எடுத்துக் காட்டுகிறது இவ்வாக்கம்.

S. P. சர்மா (புவியியல் சிறப்புப் பட்டதாரி ஆசிரியர், மன்னார்)

நவீன கம்யூட்டர் யுகத்திலே உலகம் ''சுருக்கி வருகிறது''
என்ற உண்மையை இந்நூலினைப் படித்தபோது உணரமுடிந்தது.
பரப்பளவுபோன்ற விபரங்களையும் சேர்க்கலாம்.
சகலருக்கும் உகந்தது.

சுன்னாகம் — சபா புஸ்பநாதன்

புதிய அமைப்பு, பரந்த தகவல் கொண்டதால்
எவருக்கும் உபயோகமானது இந்நூல்.

டாக்டர் சு. மகாலிங்கம்

துரையரின் இந்நூல் ஐம்பது நாடுகளை அறியும்
ஒரு கலைக் களஞ்சியம் என்று கூறின் மிகையாகாது.
இவரின் பணி தொடரட்டும்.

ஆ. கமலநாதன் அதிபர்
(சைவபிரகாச மகாவித்தியாலயம், இனுவில்)

சமூகக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களும் கற்கும் மாணவர்களும்
கட்டாயம் வாசிக்கவேண்டிய நூல்.

அ. தம்பித்துரை
(ஆசிரியர் ஆலோசகர், சமூகக்கல்வி, மானிப்பாய்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்த கதை


இன்றைய தமிழ் சமூகத்தின் தேவைகளை மனதில் கொண்டு சில வருடங்களாக முயற்சித்து இந்நூலினை உருவாக்கியுள்ளேன். எனது ஆக்கம் என்று சொல்வதைவிட நண்பர்கள், அறிஞர்கள், நூதுவராலயங்களில் உள்ளவர்கள் போன்றோரின் கூட்டு என்று கூறின் மிகையாகாது.

பயனுள்ளதாகச் செய்யவேண்டும், அதிலும் புதுமையாகச் செய்யவேண்டும் என்று எனது விருப்புக்கு அமைய இதனை ஆக்கித் தங்கள் கைகளில் தந்துள்ளேன். இதில் வரும் தகவல்கள் சரியானதாகவும் புள்ளிவிபரங்கள் அண்மைக் காலத்தில் எடுத்ததாகவும் உள்ளன. ஆனால் புள்ளிவிபரங்கள் மாறுபடலாம். அதனைக் குறிப்பதற்கு இந்நூலின் பிற்பகுதியில் இணைப்பு ஒன்றும் வைத்துள்ளேன்.

ஐம்பது நாடுகளை அறியுங்கள் என்ற இந்நூலிற்கு மனமுவந்து முகவுரையைத் தந்துதவிய கல்வி அமைச்சின் இணைச் செயலர் திரு. வெ. சபாநாயகம் அவர்களுக்கும், என்னைப் பற்றி எடுத்துரைக்கும் அதிபர் சி. சரவணபவன் (சிற்பி) அவர்களுக்கும், உள் அமைப்புக்கு உதவிய கலைஞர் சுப்பிரமணியம் அவர்களுக்கும், முகப்புப்படம் வரைந்த ஓவியர் அனுசியா அவர்களுக்கும், நவம் அவர்களுக்கும், சிறப்பாக அச்சடித்துதவிய யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

க. துரைசிங்கம்

நாட்டின் பெயர் — அவுஸ்திரேலியா
AUSTRALIA
தலைநகரம் — கான்பிரா
வாழும் இனமக்கள் — ஆங்கிலேயர் ஆதிக் குடிகளைச் சேர்ந்தோர்
மக்கள் தொகை — 16 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம்
நாணயம் — டொலர்
சமயம் — கிறிஸ்தவம் (பல பிரிவுகள்)
உற்பத்திகள் — கோதுமை, பாற்பொருட்கள்
தலா வருமானம் — 9820 அமெ - டொலர்





அவுஸ்திரேலியா ஒரு சுதந்திர ஜனநாயக நாடு. இங்கு வாழ்பவர்கள் 1788 ல் பிரித்தானியாவிலிருந்து 10 கப்பல்கள் மூலம் வந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களும் ஆதி வாசிகளின் வழித்தோன்றல்களுமாவர். ஒரு கண்டமே ஒரு நாடாகவுள்ளது இங்குதான். தங்கம் எடுக்கும் இந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சி முறை நடைபெறுகிறது. கல்வி வளர்ச்சிக்காகப் பெருந்தொகை பணத்தை செலவிடும். இங்கு 19 பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — அவுஸ்திரியா AUSTRIA
தலைநகரம் — வியன்னு
வாழும் இன மக்கள் — ஜேர்மனியர். சிலாவியர். கங்கேரியர். செக்.
மக்கள் தொகை — 8 மில்லியன்
அரச மொழி — ஜேர்மன்
நாணயம் — சிலிங்
சமயம் — கத்தோலிக்கம்
உற்பத்திகள் — இயந்திரங்கள். பார்லி இரசாயணங்கள்.
தலா வருமானம் — .0995 அமெ. டொலர்

அவுஸ்திரியாவில் பல இன மக்கள் வாழ்கின்றூர்கள். இங்கு சமஷ்டி முறையிலான குடியரசு ஆட்சி நடைபெறுகிறது. இரண்டாம் உலகப் போரிலே முக்கிய இடம் வகித்த நாடுகளில் அவுஸ்திரியாவும் ஒன்றுகும். முதலாம் உலகப் போரின் முடிவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையினுல அவுஸ்திரியாவிற்கு நட்டங்கள் ஏற்பட்டது தடுக்க முடியாததாகி விட்டது.






நாட்டின் பெயர் — இந்தியா INDIA
தலைநகரம் — புதுடில்லி
வாழும் இனமக்கள் — ஆரியர். திராவிடர்.
மக்கள் தொகை — 766 மில்லியன்
அரச மொழி — இந்தி
பிறமொழிகள் — 15 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்
நாணயம் — ரூபா
சமயம் — இந்து. இஸ்லாம். கிறிஸ்தவம்.
உற்பத்திகள் — தேயிலை. கோதுமை. சணல்.
தலா வருமானம் — 260 அமெ. டொலர்

குடியரசு நாடான இந்தியாவில் 26 மாநில ஆட்சிகள் நடைபெறுகின்றன. 80 பேச்சு மொழிகள் இருக்கின்றன. உலகப்புகழ் பெற்ற தாஜ்மஹால் மாளிகையும் அஜந்தா எல்லோரா போன்ற குகைக் கலைகளையும் உள்ளடக்கிய நாடு. மகாபாரதம். இராமாயணம் ஆகிய இதிகாசங்களைத் தந்ததும் இந்நாடே. தென்கிழக்காசியாவில் மிக உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட இந்நாட்டில் மாகாத்மாகாந்தி. ரவிந்திரநாத் தாகூர். சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெரியார்கள் பிறந்து வாழ்ந்தமை பெருமைக்குரிய விடயமாகும். மத்திய அரசில் லோக்சபையும். இராச்சிய சபையும் மந்திரிசபையும். இருப்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — இந்தோனேசியா
INDONESIA
தலைநகரம் — ஜகார்த்தா
வாழும் இன மக்கள் — மலே, சீனர்
மக்கள் தொகை — 165 மில்லியன்
அரச மொழி — இந்தோனேசியா, ஆங்கிலம்
நாணயம் — ரூப்பியா
சமயம் — இஸ்லாம், இந்து
கிறிஸ்தவம், பௌத்தம்
உற்பத்திகள் — இறப்பர், கோப்பி,
பெற்றோலியம், தகரம்
தலா வருமானம் — 420 அமெ. டொலர்





இந்தோனேசியாக் குடியரசு என அழைக்கப்படும் இது பல தீவுகளைக் கொண்ட நாடாகும். இது தென் கிழக்காசியாவில் அமைந்துள்ளது. இங்கு இராமாயணக் கதைகளும் காட்சிகளும் மக்கள் கதைகளில் கலந்திருப்பதை இன்றும் காணலாம். முன்பு சோழமன்னர் ஆட்சி இந்தோனேசியா வரை பரந்திருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். இங்கு தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சிமுறை நடைபெறுகிறது.







நாட்டின் பெயர் — இத்தாலி ITALY
தலைநகரம் — ரோம்
வாழும் இன மக்கள் — இத்தாலியர்
மக்கள் தொகை — 57.5 மில்லியன்
அரச மொழி — இத்தாலி
நாணயம் — லீறு
சமயம் — ரோமன் கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை, பழவகைகள்,
கார், கந்தோர்
பாவனைப் பொருட்கள்.
தலா வருமானம் — 6480 அமெ. டொலர்

ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களின் பிரதான நாடு. இத்தாலி பண்டைய கலைச் செல்வங்கள் நிறைந்த நாடு. மேதைகளான யூலியசீசர், டாவின்சி போன்றவர்களை உலகிற்குத் தந்தநாடு. உலக அதிசயங்களில் ஒன்றான சாந்த கோபுரம் இங்கு உள்ளது. உலகிலே பெரிய தேவாலயங்கள் கூட இங்குதான் உள்ளன. இந்நாட்டினுள்ளே வத்திக்கான் அரசு அமைந்துள்ளது. தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சி இங்கு நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் பெயர் — இலங்கை SRI LANKA
தலைநகரம் — கொழும்பு
வாழும் இன மக்கள் — சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர்.
மக்கள் தொகை — 15 மில்லியன்
அரச மொழி — சிங்களம்
பிறமொழிகள் — தமிழ், ஆங்கிலம்
நாணயம் — ரூபா.
சமயம் — பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்
உற்பத்திகள் — தேயிலை, இறப்பர், கொக்கோ, தெங்கு, நெல், இரத்தினம்.
தலா வருமானம் — 330 அமெ. டொலர்

இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிர்வது இலங்கை. இயற்கை வளம் நிறைந்த இங்கு உல்லாசப்பயணிகள் வருவது சகசமாகிவிட்டது. இங்கு ஜனாதிபதியின்கீழ் பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. பண்டைக்காலந் தொடக்கம் வாசனைத் திரவியங்களுக்கும் இரத்தினக் கற்களுக்கும் யானைத் தந்தங்களுக்கும் பேர் எடுத்த நாடு. சிங்களவர்களும் தமிழர்களும் இந்நாட்டினை ஆட்சி செய்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4-ம் திகதி ஆங்கில ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது. ஆனால் தமிழர்கள் உரிமைக்காக இன்றும் போராடுகிறார்கள்.



நாட்டின் பெயர் — ஈரான் IRAN
தலைநகரம் — தெகிறன்
வாழும் இன மக்கள் — பேஷியர், துருக்கியர்.
மக்கள் தொகை — 37 மில்லியன்
அரச மொழி — பேஷியன்
நாணயம் — றியல்
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — கம்பளம், பெற்றோலியப்பொருட்கள்
தலாவருமானம் — 1621 அமெ. டொலர்



மன்னராட்சியிலிருந்து குடியரசான நாடு ஈரான். இங்கு பெற்றோலியப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இந்நாட்டிற்கும் ஈராக்கிற்கும் அடிக்கடி சண்டை நடைபெறுகிறது. வண்ணவண்ணக் கம்பளங்களை உற்பத்தி செய்து உலகிற்குக் கொடுக்கிறது. ஈரான் நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்கள் 27 வீதமானோரே. மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவரே நாட்டின் தலைவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டின் பெயர் — ஈராக் IRAQ
தலைநகரம் — பாக்தாத்
வாழும் இன மக்கள் — அரேபியர், கேடில்
மக்கள் தொகை — 13.5 மில்லியன்
அரச மொழி — அரபு
நாணயம் — டினார்
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — பெற்றோலியம், கம்பளி, பேரீந்து.
தலா வருமானம் — 2300 அமெ. டொலர்



மெசப்பொத் தோமியா என்று முன்பு அழைக்கப்பட்ட நாடே இன்றைய ஈராக்காகும். இந் நாட்டவர்களை எழுத்துக்களின் முன்னோடிகள் என அழைப்பர். இங்கு உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு பூந்தோட்டம் அமைந்துள்ளது. இது ஒரு குடியரசு நாடாகும். பெற்றோலிய நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.



நாட்டின் பெயர் — எகிப்து EGYPT
தலைநகரம் — கெய்ரோ
வாழும் இனமக்கள் — எகிப்தியர், அரேபியர்
மக்கள் தொகை — 42 மில்லியன்
அரச மொழி — அரபு
பிற மொழி — ஆங்கிலம்
நாணயம் — பவுண்
சமயம் — இஸ்லாம், கத்தோலிக்கம்
உற்பத்திகள் — பேரீந்து, கரும்பு, யூரேனியம் பெற்றோலியம்
தலா வருமானம் — 690 அமெ.டொலர்.






நைல் நதியால பண்டைககாலததில் நாகரீகப் பெருமையடைந்த நாடுதான் எகிப்து. இதனை ஐக்கிய அரபுக்குடியரசு என அழைப்பர். பண்டைப் பெருமைகளை எடுத்துக்கூறும் வகையில் இன்றும் பிரமிட்சுகள் காட்சி தருகின்றன. பிரசித்தி பெற்ற சுவேஸ் கால் வாயையும் கொண்டுள்ளது எகிப்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் பெயர் — ஐக்கிய அமெரிக்கா U.S.A
தலை நகரம் — வாசிங்டன்
வாழும் இனமக்கள் — வெள்ளையர், ஐரோப்பியர், கறுப்பர்
மக்கள் தொகை — 205 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம்
நாணயம் — டொலர்
சமயம் — புரட்டஸ்தாந்து, கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை, பருத்தி, இயந்திர வகைகள்
கல்வி அறிவு — 99 வீதமானோர்
தலா வருமானம் — 12700 அமெ.டொலர்



ஐக்கிய அமெரிக்கா ஒரு சமஷ்டிக் குடியரசு நாடாகும். ஐம்பது மாநிலங்களை கொண்ட இது ஒரு வல்லரசு. பெருமை மிக்க ஆபிரகாம் லிங்கன் அவர்கள் இங்கு தான் பிறந்தார். உற்பத்தித் துறையில் குறிப்பாகப் பருத்தி போன்றவற்றில் உலகிலே முன்னணியில் நிற்கிறது. ஐக்கிய அமெரிக்கா சந்திரமண்டலத்திற்கு அனுப்பிய மனிதன் நீல் ஆம் ஸ்ரோங் முதலில் சந்திரனில் காலை வைத்தார். உலகிலே பெரிய நீர் வீழ்ச்சியான நயகராவும் உலகிலே உயர்ந்த அணைக்கட்டான போல்டன் அணையும் இங்குள்ளது குறிப்பிடத்தக்கது.







நாட்டின் பெயர் — கனடா CANADA
தலைநகரம் — ஒட்டாவா
வாழும் இன மக்கள் — பிரித்தானியர், பிரான்சியர், எக்சிமோவர்
மக்கள் தொகை — 25 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம், பிரான்சு
நாணயம் — டொலர்
சமயம் — கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு
தலா வருமானம் — 10230 அமெ.டொலர்

கனடா ஒரு சமஷ்டிக்குடியரசு நாடாகும். இது உலகில் இரண்டாவது பெரிய நாடு. இன்றைய கனடாவின் சரித்திரம் தொடங்கிக்கிட்டத்தட்ட 475வருடங்களாகின்றன இந்நாடு பத்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. விவசாய இயந்திர உற்பத்தியிலும் மீன்பிடித்துறையிலும் முக்கிய ஈடுபாடுடைய நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் பெயர் — கயானு - பிரித்தானியா GUYANA
தலை நகரம் — யோர்ச
வாழும் இன மக்கள் — இந்தியர், கறுப்பர்
மக்கள் தொகை — 9. இலட்சம்
அரச மொழி — ஆங்கிலம்
நாணயம் — டொலர்
சமயம் — கத்தோலிக்கம், இந்து
உற்பத்திகள் — விவசாயப பொருட்கள். சீனி
தலா வருமானம் — 690 அமெ—டொலர்



தென் அமெரிக்காவிலுள்ள மூன்று கயானுககளில் இது ஒன்ருகும். இங்கு இந்தியாவிலிருந்து சென்று குடியேறியவர் களும் கறுப்பின ஆதிக்குடிகளும் வாழ்கின்றனர். இது சிறிய நாடாக இருந்த போதிலும் விவசாயத் துறையில் முன்னேறி வருகிறது. இங்கு இந்துக்கள் 55 விதத்தினர் வாழ்கின்ருர்கள் தீசிந்த திராவிட மொழிப் பெயர்களே அங்குள்ள அனேகரு க்கு வைத்திருப்பதைக் கவனிக்கலாம்.



நாட்டின் பெயர் — கம்போடியா CAMBODIA
தலை நகரம் — நொம் பேர்
வாழும் இனமக்கள் — கர்மா சீனர்
மக்கள் தொகை — 5 மில்லியன்
அரச மொழி — கர்மா
நாணயம் —
சமயம் — பௌத்தம்
உற்பத்திகள் — இறப்பர். மரப்பொருட்கள். அரிசி



கம்போடியாவை கம்பூச்சியாவெனவும அழைப்பர். தென் கிழக்காசியாவிலுள்ள சிறிய நாடுகளில் இதுவும் ஒன்ருகும். நீண்ட காலம் பிரச்சனைகளில் ஈடுபட்டிருந்த வாழ்பவர் நாடு. வளர்ந்து வரும் நாடுகளில் இதுவும் ஒன்ருகும். இங்கு களில் அநேகர் விவசாயிகளே இது ஒரு பொதுவுடமை நாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — கிறீஸ் GREECE
தலை நகரம் — எதென்ஸ்
வாழும் இன மக்கள் — கிரேக்கம்
மக்கள் தொகை — 9.5 மில்லியன்
அரச மொழி — கிரேக்கம
பிற மொழிகள் — ஆங்கிலம்
நாணயம் — ரச்மா
சமயம் — கிரேக்கஓ தொடெக்ஸ்
உற்பத்திகள் — இரசாயணப் பொருட்கள், கப்பல் புகையிலை
தலா வருமானம் — 4520 அமெ.டொலர்

கப்பல் போக்கு வரத்திற்கும், வணிகத்திற்கும் பிரசித்தி பெற்றது கிறீஸ்நாடு. இது சரித்திரங்கள் கூறும் நாடாகும். இலியட் ஒடிசி ஆகிய உலகப்புகழ் இதிகாசங்களைத் தந்ததும் இந்நாடே. கிறீஸ் நாட்டிற்குன் மருதன் ஒட்டப்போட்டி முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று கட்டிய நாடக அரங்குகள் இன்றும் இடிபாடுகளுடன் இருப்பதைக் காணலாம். உல்லாசப் பயணிகள் வருகைதரும் இந் நாடு ஒரு குடியரசு நாடாகும்.





நாட்டின் பெயர் — கியூபா CUBA
தலை நகரம் — கவன்னா
வாழும் இன மக்கள் — ஸ்பானியர்
மக்கள் தொகை — 11 மில்லியன்
அரச மொழி — ஸ்பானியா
நாணயம் — பீசோ
சமயம் — கத்தோலிக்கம்
உற்பத்திகள் — சீனி நிக்கல், புகையிலை, இரசாயணப், பொருட்கள்
தலா வருமானம் — 840 அமெ. டொலர்

மெக்சிக்கோ வளைவுக்குள் உள்ள நாடு கியூபா. இங்கு ஒரு கட்சிப் பொதுவுடமை ஆட்சி நடைபெறுகிறது. இந்நாடு ஐக்கிய அமெரிக்கா ஆட்சியின் கீழ் இருந்து 1959 இல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக 1961 இல் தனிப் பொதுவுடமை நாடாகியது. மெக்சிக்கோவையும், கியூபாவையும் நோக்கும் பொழுது கடலோடி கொலம்பசையாரும் மறந்திட முடியாது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — கிழக்கு ஜேர்மனி
EAST GERMANY
தலை நகரம் — பேர்லின்
வாழும் இன மக்கள் — ஜேர்மானியர்
மக்கள் தொகை — 17 மில்லியன்
அரச மொழி — ஜேர்மன் மொழி
நாணயம் — மார்க்
சமயம் — புரட்டஸ்தாந்து.
றோ. கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை.
எலக்ரோனிக்யந்திரம்
தலா வருமானம் — 7180 அமெ.டொலர்

ஜேர்மனி நாட்டின் கிழக்குப் பகுதியான இது பொதுவுடமைச் சார்புடையநாடாகும். கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் முள் வேலிகளும், மதில்களும் பிரிக்கின்றன. முதலாம் உலகப்போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் முக்கிய இடம் வகித்ததும் கிட்லர் ஆட்சி நடந்தியதும் இங்குதான். இரண்டாவது உலகப் போரின் பின்னரே கிழக்கு மேற்காகப் பிரிந்தது குறிப்பிடத்தக்கது






நாட்டின பெயர் — சவுதி அரேபியா
SAUDI ARABIA
தலை நகரம் — றியாட்
வாழும் இன மக்கள் — அரேபியர்
மக்கள் தொகை — 9.5 மில்லியன்
அரச மொழி — அரபு
நாணயம் — றியால்
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — பெற்ரோலியப் பொருட்கள்
தலா வருமானம் — 14578 அமெ.டொலர்




சவுதி அரேபியாவில் மன்னர் ஆட்சி நடை பெறுகிறது. எண்ணெய் வயல்களால் பெருமளவு பொருள்களைச் சம்பாதிக்கும் நாடு. பாலைவனம் நிறைந்த நாடாக இருந்த போதிலும் செயல் முறையில் சோலைகளாக்கிக் கொண்டு வருகிறார்கள் இந் நாட்டில் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டவர்கள் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் மக்களின் புனிதஸ்தலங்களாகிய மக்காவும், மதீனாவும் இங்கு அமைந்திருப்பதால் வருடா வருடம் பெருந் தொகையான மக்கள் வருகை தருகிறார்கள்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — சிங்கப்பூர் SINGAPORE
தலை நகரம் — சிங்கப்பூர் நகர்
வாழும் இன மக்கள் — மலாயர், இந்தியர்,
சீனர், தமிழர், ஐரோப்பியர்
மக்கள் தொகை — 2.5 மில்லியன்.
அரச மொழி — ஆங்கிலம், சீனம்
பிறமொழிகள் — மலே—தமிழ்
நாணயம் — டொலர் (சிங்கப்பூர்)
சமயம் — பௌத்தம, இஸ்லாம், இந்து
கிறிஸ்தவம்
உற்பத்திகள் — எலெக்ரோனிக் மின்சாரப்
பொருட்கள்
தலா வருமானம் — 5615 அமெ.டொலர்



சிங்கப்பூரா எனவும் இந்நாட்டினை அழைப்பர். கிழக்கிந்திய வியாபாரக் கம்பனியால் உருவாக்கப்பட்டநாடு கிழக்குலகையும் மேற்குலகையும் இணைக்கும். இந்நாட்டில் ஐந்து நட்சத்திரக் கொட்டல்களும் வியாபாரத் ஸ்தலங்களும் கூடுதலாக இயங்குகின்றன. பாராளுமன்ற ஆட்சி நடைபெறும் இங்கு பிரதமமந்திரிக்கு அதிகாரம் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் தேசியதினம், சீனப்புதுவருடம், தைப்பூசம் தீபாவளி போன்ற கொண்டாட்ட நாட்களுக்கு அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.





நாட்டின் பெயர் — சீனு CHINA
தலை நகரம் — பீக்கிங்
வாழும் இன மக்கள் — சீனர்
மக்கள் தொகை — 139 மில்லியன்
அரச மொழி — சீனம்
நாணயம் — யுவான்
சமயம் — கொன்பூசியஸ், பௌத்தம்
உற்பத்திகள் — நெல், பட்டு,
நவீன யந்திரங்கள்
தலா வருமானம் — 3471 அமெ.டொலர்

மக்கள் சீனக் குடியரசு என இதனை அழைபபர். இது பொதுவுடமைத் தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் பெரியநாடாகும். உலக அதிசயங்களில் ஒன்றான நெடுஞ்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. சீன மக்களே வெடி மருந்தின் உபயோகத்தையும் உலகுக்குத் தந்தவர்கள். சீன மக்கள் மேலிருந்து கீழாக எழுதுவார்கள். முதலில் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும், அச்சுயந்திரத்தைப் பாவனைக்குக் கொண்டு வந்தவர்களும் இவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — சுவீடன் SWEDEN
தலை நகரம் — ஸ்ரொக் கோம்
வாழும் இன மக்கள் — சுவீடிஸ் மக்கள்
மக்கள் தொகை — 8.5 மில்லியன்
அரச மொழி — சுவீடிஸ்
நாணயம் — குரேன்
சமயம் — லூதர், கிறிஸ்தவம்
உற்பத்திகள் — பாற் பொருட்கள்.
யந்திரங்கள்
தலா வருமானம் — 13€3 அமெ.டொலர்


மன்னராட்சி நடைபெறும் நாடுகளில் சுவீடனும் ஒன்ருகும். இது வடதுருவத்திற்கு அண்மையிலுள்ள நாடானபடியால் பனிபடர்ந்த நாடாகும். கார் உற்பத்திகளில் முக்கிய இடம் வகிக்கும் நாடு.








நாட்டின் பெயர் — செக்கோசிலாவாக்கியா
CZECNOSLOVAKIA
தலை நகரம் — பராகு
வாழும் இன மக்கள் — செக். சிலாவியர்
மக்கள் தொகை — 16 மில்லியன்
அரச மொழி — செக்
நாணயம் — குறுண
சமயம் — கத்தோலிக்கம்
உற்பத்திகள் — துணி. வண்டிகள்.
உரவகைகள்
தலா வருமானம் — 5820 அமெ.டொலர்



செக் மக்களும் சிலாவிய மக்களும் இங்கு வாழ்கின்ருர்கள் இது ஒரு பொதுவுடமை நாடாகும். இது போலாந்து. சோவியத்து ருசியா. ஜேர்மனி போன்ற நாடுகளை அண்டை நாடுகளாகக் கொண்டுள்ள வோர்சோ ஒப்பந்த நாடுகளில் செக்கோசிலாவாக்கியாவும் ஒன்ருகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் பெயர் — சோமாலி SOMALI
தலைநகரம் — மோகதிகா
வாழும் இனமக்கள் — சோமாலியர், அரேபியர்
மக்கள் தொகை — 3.25 மில்லியன்
அரச மொழி — சோமாலி, அரபு
நாணயம் — சிலிங்
சமயம் — இஸ்லாம், கத்தோலிக்கம்
உற்பத்திகள் — தோற் பொருட்கள், மீன்
தலா வருமானம் — 187 அமெ.டொலர்.

இது ஒரு குடியரசுநாடாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இத்தாலியரும், பிரித்தானியரும் இதனைக் கூறு போட்டு ஆட்சி செய்தனர் ஆனால் 1960 இல் இரண்டும் இணைந்து குடியரசானது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பெயர் — தாய்லாந்து THAILAND
தலை நகரம் — பாங்கொக்
வாழும் இனமக்கள் — தாய், சீனர்
மக்கள் தொகை — 45 மில்லியன்
அரச மொழி — தாய்
பிறமொழி — சீனம்
நாணயம் — பாட்
சமயம் — பௌத்தம், இஸ்லாம்
உற்பத்திகள் — நெல், தகரம், இறப்பர், கைத்தொழிற்பொருட்கள்
தலா வருமானம் — 791 அமெ.டொலர்



மன்னராட்சி நடைபெறும் நாடு தாய்லாந்து. பௌத்த நாடான இங்கு ஐக்கிய நாடுகள் சபையின் சில இலாகாக்களின் தலைமை அலுவலகங்கள் அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது நான்கு மாநிலங்களாகப் பிரிக்கபபட்ட இந்நாடு இயற்கை இறப்பர் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — துருக்கி TURKEY

தலைநகரம் — அங்காரா

வாழும் இன மக்கள் — துருக்கியர், கேடில்

மக்கள் தொகை — 40 மில்லியன்

அரச மொழி — துருக்கிய மொழி

பிறமொழிகள் — கேடில்


நாணயம் — லீரு


சமயம் — இஸ்லாம்

உற்பத்திகள் — பருத்தி , புகையிலை

தலா வருமானம் — 1077 அமெ.டொலர்

முஸ்லிம் குடியரசு நாடான துருக்கியுள் பண்டைய நாகரீக நாடான கொன்தான் திநோபிள் அடங்கும் இந்நாடு மத்திய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகும். இங்கு வாழ்வோர் பருத்தி புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.
















நாட்டின் பெயர் — தென்னாபிரிக்கா

SOUTH AFRICA

தலை நகரம் — பிறிற் ரோறியா

வாழும் இன மக்கள் — கறுப்பர், ஐரோப்பியர் இந்தியர்.

மக்கள் தொகை — 21 மில்லியன்

அரச மொழி — ஆங்கிலம் , ஆபிரிக்கம்


நாணயம் — றுண்ட்

சமயம் — கிறிஸ்தவம் , இந்து

உற்பத்திகள் — தங்கம் , இரத்தினம் , கம்பளம்

தலா வருமானம் — 7600 அமெ.டொலர்

ஆபிரிக்காவின் தென்முனையில் அமைந்துள்ளது தான் தென்னாபிரிக்கா இங்கு ஐரோப்பியர் குறைந்த வீதத்தினராகவும் கறுத்த இனத்தவர் கூடிய வீதத்தினராக வாழ்கின்ற போதிலும் ஐரோப்பியரின் ஆட்சியே நடைபெறுகிறது இங்கு வாழும் கறுத்த இனத்தவர்கள் உரிமை மறுக்கப்பட்டவர்களாக வாழ்கிறார்கள் இது ஆபிரிக்காவின் தென் பகுதி நாடுகளுக்கு துறை முகநாடாக விளங்குகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — நியூசிலாந்து NEWZEALAND
தலை நகரம் — வெலிங்டன்
வாழும் இனமக்கள் — ஐரோப்பியர்
மக்கள் தொகை — 4 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம். மயோரி
நாணயம் — டொலர்
சமயம் — அங்கிலிக்கம் வேதம் கத்தோலிக்கம்
உற்பத்திகள் — பாற்பொருட்கள். கம்பளம் இறைச்சி
தலா வருமானம் — 7090 அமெ.டொலர்


இது ஒரு முடிக்குரிய குடியரசு நாடாகும். இங்கு பாராளுமன்ற ஆட்சி நடை பெறுகிறது. நியூசிலாந்தில் ஒன்பதினாயிரம் அடி உயரத்தில் எரிமலை ஒன்று உள்ளது குறிப்பிடத்தக்கது.









நாட்டின் பெயர் — நேபாளம் NAPAL
தலை நகரம் — கதமண்டு
வாழும் இன மக்கள் — கூருக்காஸ். இனத்தினர்
மக்கள் தொகை — 16 மில்லியன்
அரச மொழி — நேபாளி. நேவாளி
பிறமொழிகள் — 11 மொழிகள்
நாணயம் — ரூபா
சமயம் — இந்து. பௌத்தம்
உற்பத்திகள் — உபஉணவு பொருட்கள். மரப் பொருட்கள்
தலா வருமானம் — 160 அமெ.டொலர்





உலகிலே இந்து கலாச்சாரத்தை பேணுதற்கும் உள்ள ஒரே இந்து நாடு நேபாளமாகும். இங்கு இந்து அரசனே ஆட்சி செய்கிறான் இது இந்தியாவின் வட எல்லையில் மலைப் பாகான பகுதியைக் கொண்ட நாடாகும். இது ஒரு விவசாயநாடாக இருந்த போதிலும் மரக் கைத்தொழில்களுக்கு குறை வேயில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாட்டின் பெயர் — நைஜீரியா NIGERIA
தலை நகரம் — லாகோஸ்
வாழும் இன மக்கள் — கொசா, பொருவா, ஈபோ
மக்கள் தொகை — 79 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம், ஹைபில்
நாணயம் — நைரா
சமயம் — இஸ்லாம், கிறிஸ்தவம்
உற்பத்திகள் — றப்பர் கொக்கோ
தலா வருமானம் — 1010 அமெ.டொலர்


ஜனநாயகக் குடியரசு நாடான நைஜீரியா வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாகும். இந் நாடு 1960 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெறறது. சனத்தொகைக் கேற்ப பொருள் வருவாயும் இங்குண்டு 1967 இல் உள்நாட்டு யுத்தம் நடை பெற்ற போது இரு குழுக்களுக்கும் சிலநாடுகள் உதவி வந்தமை குறிப்பிடத்தக்கது.






நாட்டின் பெயர் — நோர்வே NORWAY
தலை நகரம் — ஒஸ்லோ
வாழும் இன மக்கள் — நோவியியர்
மக்கள் தொகை — 5 மில்லியன்
அரச மொழி — நோர்வே
நாணயம் — குரோன்
சமயம் — லூதர் கிறிஸ்தவம்,
உற்பத்திகள் — அலுமினியம், மீன், கப்பல், கடுதாசி, எண்ணெய்
தலா வருமானம் — 13333 அமெ.டொலர்

நோர்வே கடல் மட்டத்திற்கும் பள்ளமாக அமைந்துள்ள நாடாகும். இந்நாட்டில் எந் நேரமும் சூரிய ஒளியைக் காணலாம். மன்னராட்சி நடை பெறும் இங்கு அலுமினிய கடதாசி உற்பத்திகள் முக்கிய இடங்களை வகிக்கின்றன. இந்நாட்டில் ஆதியில் வாழ்ந்தவர்கள் வேட்டையாடுதலிலும் மீன் பிடித்தலிலும் ஈடுபட்டதாக அறியக்கிடக்கின்றது. கப்பல் போக்குவரத்துகளில் ஈடுபட்டுள்ள நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — பர்மா BURMA
தலை நகரம் — ரங்கூன்
வாழும் இன மக்கள் — பர்மியர், இந்தியர்
மக்கள் தொகை — 35 மில்லியன்
அரச மொழி — பர்மியமொழி, ஆங்கிலம்
நாணயம் — கியர்ற்
சமயம் — பௌத்தம்
உற்பத்திகள் — தேக்கு, இறப்பர், சணல், நெல்
தலா வருமானம் — 180 அமெ.டொலர்





தென் கிழக்காசிய நாடுகளில் ஒன்றான பர்மா இலங்கையுடன் பண்டைக் காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. 1948 ஆம் ஆண்டு சுதந்திர பர்மா உருவாக்கப்பட்டது. ஒரு கட்சி பாராளுமன்ற ஆட்சி முறை இங்கு நடை பெறுகிறது.








நாட்டின் பெயர் — பாக்கிஸ்தான் PAKISTAN
தலை நகரம் — இஸ்லாமாபாத்
வாழும் இன மக்கள் — பஞ்சாபியர், சிந்தியர், உருதர்
மக்கள் தொகை — 90 மில்லியன்
அரச மொழி — உருது
பிற மொழிகள் — ஆங்கிலம், பஞ்சாப்
நாணயம் — ருபா
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — நெல், பார்லி, துணிவகைகள் இரசாயனப் பொருட்கள்
தலா வருமானம் — 360 அமெ.டொலர்

இந்தியாவிலிருந்து பிரிந்து ஒரு தனி நாடாக அமைந்தது பாக்கிஸ்தான் இது 1947 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. நீண்ட நாட்களாக இராணுவ ஆட்சியே நடை பெறுகிறது. சிந்து வெளி நாகரீக நகரங்களான மொகஞ்சதாரோ அரப்பா என்பன பாக்கிஸ்தானில் அடங்குகின்றன. சிந்து வெளி நாகரீகத்தில் திராவிடர் கலாச்சாரம் இருந்ததாக சரித்திர ஆய்வாளர் கூறுவர். இது ஒரு விவசாயநாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — பிரித்தானியா BRITAIN
தலை நகரம் — இலண்டன்
வாழும் இன மக்கள் — ஆங்கிலேயர்
மக்கள் தொகை — 56 மில்லியன்
அரச மொழி — ஆங்கிலம்
நாணயம் — பவுண்
சமயம் — கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்
உற்பத்திகள் — கைத்தொழில், கோதுமை
இயந்திரம்
தலா வருமானம் — 8214 அமெ. டொலர்

ஐக்கிய இராச்சியம் பெரிய பிரித்தானியா எனவும் இதனை அழைப்பர். பிரித்தானியா பல நாடுகளைத் தனதாக்கி பெரிய சாம்பிராச்சியமாக ஒரு காலத்தில் விளங்கியது. இந்நாட்டில் இன்று முடியாட்சியும் பாராளுமன்ற ஆட்சியும் ஒருங்கி ணைந்து நடைபெறுகின்றது. இந் நாடு பாராளுமன்ற ஜனநாயகத்திற்குப் பிதா நாடாகக் கருதப்படுகிறது. இங்கு பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள்சபை, மந்திரிசபை என மூன்று சபைகள் இருக்கின்றன. பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் சேர்ந்த அமைப்பே பொது நலவாயம் ஆகும்.







நாட்டின் பெயர் — பிரான்ஸ் FRANCE
தலை நகரம் — பாரிஸ்
வாழும் இன மக்கள் — பிரான்ஸியர்
மக்கள் தொகை — 61 மில்லியன்
அரச மொழி — பிரான்ஸ்
நாணயம் — பிராங்
சமயம் — றோமன் கத்தோலிக்கம்
இஸ்லாம்
உற்பத்திகள் — கோதுமை, இயந்திரப் பொருட்கள்
தலா வருமானம் — 10557 அமெ. டொலர்





சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளை புரட்சி மூலம் முதலில் உலகிற்குத் தந்த நாடு பிரான்ஸாகும். பிரபுக்களின் கொடுமைகளால் தாங்கமுடியாத பொதுமக்கள் செய்த புரட்சியே பிராஞ்சியப்புரட்சியாகும். இங்கு விவசாயமும் கைத்தொழிலும் வளர்ந்துள்ளது. இது ஒரு குடியரசாகும். இங்கு தேர்தல் மூலமான பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. ஜனாதிபதியே நாட்டின் தலைவர். ரேடியத்தைக் கண்டு பிடித்த மடம் கியூரி அம்மையார், பிளேட்டே அரிஸ்டோட்டில் ஆகியோர் வாழ்ந்ததும் இந்நாடே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — பிரேசில் BRAZIL
தலை நகரம் — பிரேசிலியா
வாழும் இன மக்கள் — ஐரோப்பியர், ஐரோப்பிய இந்தியர்
மக்கள் தொகை — 124 மில்லியன்
அரச மொழி — போத்துக்கல்
பிற மொழி — ஆங்கிலம்
நாணயம் — குசிரே
சமயம் — கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை, கோப்பி, பாற் பொருட்கள்
தலா வருமானம் — 2050 அமெ.டொலர்

பிரேசில் தென் அமெரிக்காவிலுள்ள பெரிய நாடாகும். இந் நாட்டில் அமேசன் நதிபாய்கின்றது. உலகில் ஏழாவது சனத்தொகை கூடிய நாடாகும். இது ஒரு விவசாய நாடாகும். குடியரசு நாடான இங்கு இராணுவச் சட்டங்களும் உள்ளன. ஜனாதிபதி நாட்டின் தலைவராவார். தேசிய சபைகள் இரண்டின் மூலம் ஆட்சி நடைபெறுகிறது.



நாட்டின் பெயர் — பிலிப்பைந்து
தலை நகரம் — மணிலா
வாழும் இன மக்கள் — மலாயா, பொலினீசன்
மக்கள் தொகை — 52 மில்லியன்
அரச மொழி — பிலிப்பினோ, ஆங்கிலம், ஸ்பானியா
நாணயம் — பேசோ
சமயம் — கத்தோலிக்கம், புரட்டஸ்தாந், இஸ்லாம்
உற்பத்திகள் — தெங்குப்பொருள், சீனி, நெல், மரக்கறி
தலா வருமானம் —






இங்கு குடியாட்சி நடைபெறுகிறது. தேசிய சபை ஒன்றும் ஆட்சிக்கு உதவியாக உள்ளது. இந்நாடு கிட்டத்தட்ட 50 தீவுகள் கொண்ட ஒன்றாகும். இங்கு வாழும் மக்கள் மலேசியாவிலும், இந்தோனிசியாவிலும் இருந்து வந்து குடியேறியவர்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கு அமெரிக்காவின் தளமிருமுன்பு இருந்ததாக சரித்திர ஆசிரியர் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — பூட்டான் BHUTAN
தலை நகரம் — திம்பு
வாழும் இன மக்கள் — பூட்டான், நேபாளம்
மக்கள் தொகை — 1.5மில்லியன்
அரச மொழி — துல்சி
நாணயம் — ஙுல்ற்றும்
சமயம் — பௌத்தம், இந்து
உற்பத்திகள் — உபஉணவுப்பொருட்கள்
கைவினைப்பொருட்கள்
தலா வருமானம் — 116 அமெ.டொலர்



இந்தியாவின் வட எல்லையில் 24 ஆயிரம் அடிக்குமேல் அமைந்துள்ள நாடு பூட்டான் வருடாவருடம் பெருந்தொகையான உல்லாசப்பயணிகள் வந்து செல்கிறார்கள். இந் நாட்டிற்கு சுற்றுலாத் துறையால் பெரும் வருமானம் கிடைக்கிறது மன்னராட்சி நடை பெறும் இங்கு விவசாயம் மேலோங்கி நிற்கிறது. இந் நாடு துணிவகைகளையும், சீனியையும் இறக்குமதி செய்கிறது.



நாட்டின் பெயர் — பெல்ஜியம் BELGIUM
தலை நகரம் — பிரசல்ஸ்
வாழும் இன மக்கள் — பிளமிஸ், ஜேர்மன் வாலூன்
மக்கள் தொகை — 10 மில்லியன்
அரச மொழி — பிளமிஸ்
பிற மொழிகள் — பிரான்ஸ்
நாணயம் — பிராங்
சமயம் — கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து
உற்பத்திகள் — கண்ணாடிப்பொருட்கள்
இரசாயனப் பொருட்கள்
வெள்ளியம்
தலா வருமானம் — 12,180அமெ.டொலர்






பிரித்தானியாவைப் போல் மன்னரும் இணைந்த ஆட்சி முறை பெல்ஜியம் நாட்டில் இருக்கிறது பெல்ஜியம் கண்ணாடி என்றால் நம்நாட்டில் தெரியாதவர்கள் இல்லை இது கைத்தொழிலில் முன்னேறி வரும் நாடு. நாக உற்பத்தியில் உலகிலே முன்னணியில் உள்ள நாடு பெல்ஜியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாட்டின் பெயர் — போத்துக்கல்
தலைநகரம் — லிஸ்பன்
வாழும் இனமக்கள் — போத்துக்கீசியர்கள்
மக்கள் தொகை — 9.51 மில்லியன்
அரச மொழி — போத்துக்கீஸ்
நாணயம் — -
சமயம் — ரோமன் கத்தோலிக்கம்
உற்பத்திகள் — பொருட்கள், உற்பத்தியும் வர்த்தகமும்
தலா வருமானம் —

போத்துக்கல் பலகட்சி ஜனநாயகக்குடியரசு என அழைக்கப்படும். இந்நாடு நாடுகாண் கடலோடிகளின் முன்னோடி நாடு 15 ம் நூற்றாண்டளவில் போத்துக்கல் நாடு உலகில் பல நாடுகளைத் தன்னாட்சிக்குட்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையும் அவ்வேளை அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







நாட்டின் பெயர் — போலாந்து POLAND
தலை நகரம் — வார்சோ
வாழும் இனமக்கள் — பொலிஸ்
மக்கள் தொகை — 37.5 மில்லியன்
அரச மொழி — பொலிஸ்
நாணயம் — ஸ்லொட்டி
சமயம் — கத்தோலிக்கம், ஒதடெக்ஸ்
உற்பத்திகள் — கோதுமை, சீனி
தலா வருமானம் — 5570 அமெ.டொலர்

ஐரோப்பாவின் சனத்தொகையில் ஏழாவது பெரியநாடு போலாந்து ஆகும். இரண்டாம் உலகப்போர் தொடக்கமே இந்நாட்டிற்றான். இங்கு மூன்று அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இது ஒரு பொதுவுடமை நாடாகும். இதனை பொலிஸ் மக்கள் குடியரசு என அழைப்பர். மிக பிரசித்தி பெற்ற வார்சோ ஒப்பந்தம் இங்கு உருவானது குறிப்பிடத்தக்கது. பல துறைகளிலும் மிகவேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நாட்டின் பெயர் — மலேசியா MALAYSIA
தலைநகரம் — கோலாலம்பூர்
வாழும் இன மக்கள் — இஸ்லாமியர், சீனர், தமிழர்
மக்கள் தொகை — 15 மில்லியன்
அரச மொழி — மலே
பிறமொழிகள் — தமிழ், ஆங்கிலம், சீனம்
நாணயம் — டொலர் (மலேசிய)
சமயம் — இஸ்லாம், இந்து, பௌத்தம்
உற்பத்திகள் — இறப்பர், தகரம், பாம் எண்ணெய்
தலா வருமானம் — 1796 அமெ.டொலர்

இயற்கை அழகு நிறைந்த மலேசியா பல்வேறு சுவாத்தியங்களைக் கொண்டுள்ளது. இஸ்லாம் மன்னர் உள்ள இந்நாட்டில் தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. 1963 இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றது குறிப்பிடத்தக்கது. மலேயருடைய விழாக்களும், சீனருடைய விழாக்களும், தமிழர்களுடைய தைப்பூசவிழாப்போன்ற விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன. இறப்பர் தோட்டங்களும் பாம் எண்ணெய் மரத்தோட்டங்களும் உள்ள நாடாகும். ஆசியன் கூட்டு நாடுகளில் இந்நாடு அங்கம் வகிக்கிறது



நாட்டின பெயர் — மாலைதீவு MALDIVES
தலை நகரம் — மேல்
வாழும் இன மக்கள் — அரேபியர், திராவிடர் சிங்களர்.
மக்கள் தொகை — 2 இலட்சம்
அரச மொழி — டிவெக், அரபு
நாணயம் — ரூபா
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — மாஸ் கருவாடு, கடற்றொழில்
தலா வருமானம் — 352 அமெ.டொலர்






இலங்கைக்குக் கிட்டவுள்ள சிறுதீவுகளின் கூட்ட நாடாகும். பொருளாதாரத்தில் குறைவான பத்துச் சிறியநாடுகளில் இதுவும் ஒன்றாகும். கல்வியிலும் மிகவும் பின்தங்கியநாடு இங்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெறுகிறது. இங்கு வாழ்பவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உலகில் புகழ் பெற்ற மாஸ் கருவாடு உற்பத்தி இங்கு நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — மெக்சிக்கோ MEXICO
தலை நகரம் — மெக்சிக்கோநகர்
வாழும் இனமக்கள் — மெக்சிக்கன், அமெரிக்கர்
இந்தியர், ஸ்பானியர்
மக்கள் தொகை — 77 மில்லியன்
அரச மொழி — ஸ்பானியா
நாணயம் — பேசோ
சமயம் — கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து
உற்பத்திகள் — கோதுமை, கோப்பி, பொன்,
பெற்றோலியம், ஈயம், நாகம்
தலா வருமானம் — 5820 அமெ. டொலர்








அமெரிக்கா கண்டத்தின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் நாடு மெச்சிக்கோ இது ஒரு சமஷ்டிக் குடியரசு. இங்கு ஜனாதிபதி நாட்டின் தலைவர். தேசிய காங்கிரஸ் அரச பீடமாகும். இதில் இருசபைகள் உள்ளன. பெற்றோலிய உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும். இந்நாடு குடாப்பகுதிசேர்ந்த நாடாகும்.





நாட்டின் பெயர் — மேற்கு ஜேர்மனி
WEST GERMANY
தலை நகரம் — போன்
வாழும் இன மக்கள் — ஜேர்மனியர்
மக்கள் தொகை — 6 மில்லியன்
அரச மொழி — ஜேர்மன்
நாணயம் — மார்க்
சமயம் — புரட்டஸ்தாந்து
ரோ.கத்தோலிக்கம்
உற்பத்திகள் — கோதுமை, இயந்திர வகைகள்
தலா வருமானம் — 11130 அமெ.டொலர்


மேற்கு ஜேர்மர் சமஷ்டிக் குடியரசு என அழைக்கப்படும் இங்கு ஜனநாயக முறையில் தேர்தல் மூலமாக உருவாக்கப்படும். பாராளுமன்றத்தின் ஆட்சி நடைபெறுகிறது. சர்வாதிகாரி கிட்லர் ஆட்சி செய்து இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனாகியதும் இங்குதான். இரண்டாம் உலகப் போரின் விளைவுதான் ஜேர்மனி கிழக்கு மேற்காகப் பிரிந்தமை. மேற்கு ஜேர்மனி மேற்கு ஐரோப்பிய நாடுகள் வசமிருந்து பின் சுதந்திரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — யப்பான் JAPAN
தலை நகரம் — டோக்கியோ
வாழும் இன மக்கள் — யப்பானியர்
மக்கள் தொகை — 110 மில்லியன்
அரச மொழி — யப்பான்
நாணயம் — யென்
சமயம் — பௌத்தம்
உற்பத்திகள் — நெல், கோதுமை, இயந்திரவகைகள், எலக்ரோனிக் மின்சாரப் பொருட்கள்
தலா வருமானம் — 9864 அமெ.டொலர்





யப்பான் நான்கு பெரிய தீவுகளை உள்ளடக்கிய நாடாகும். நிலப்பரப்பு போதாமையால் கடலினை நிலமாக்கும் நாடு. மன்னரின் கீழ் பாராளுமன்ற ஆட்சி நடைபெறும் நாடு. யப்பான், உற்பத்தித்துறையில் வளர்ச்சியடைந்த நாடு. இயற்கை வனப்புகள் நிறைந்த இங்கு இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது அமெரிக்கா போட்ட அணுக்குண்டினால் கிரோசிமா, நாகசிமா ஆகிய பகுதிகள் கருதிச் சாம்பரானது குறிப்பிடத்தக்கது.



நாட்டின் பெயர் — யூகோசிலாவியா YUGO SLAVIA
தலை நகரம் — பெல்கிறேட்
வாழும் இன மக்கள் — சிலாவியர், மசிடோனியர்
மக்கள் தொகை — 25 மில்லியன்
அரச மொழி — மசிடோனிய ஹங்கேரி
நாணயம் — தினார்
சமயம் — ஏதெடக்ஸ், இஸ்லாம் கத்தோலிக்கம்
உற்பத்திகள் — உலோகப் பொருட்கள் இயந்திரங்கள், மரப்பொருட்கள்
தலா வருமானம் — 5364 அமெ.டொலர்




இது ஒரு பொதுவுடமை நாடாகும். இங்கு சமஷ்டிக் குடியரசு ஆட்சி நடைபெறுகிறது. யூகோசிலாவியா கிரீஸிக்கு வடக்கே அமைந்துள்ள நாடு. ஒரு கட்சிதான் ஆட்சிப்பீடத்தில் உள்ளது. ஆறு பெரும் உட்பிரிவுகளைக் கொண்டதே இந்நாடு அணிசேரா இயக்கத்தை உருவாக்க முன்னின்று உழைத்த நாடுகளில் யூகோசிலாவாக்கியாவும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — லிபியா LIBYA
தலை நகரம் — திரிப்பொலி
வாழும் இன மக்கள் — அரேபியர்
மக்கள் தொகை — 3.5மில்லியன்
அரச மொழி — அரபு
நாணயம் — தினார்
சமயம் — இஸ்லாம்
உற்பத்திகள் — முந்திரிகை, தோற்பொருட்கள்
பெற்றோலியப் பொருட்கள்
தலா வருமானம் — 7918 அமெ.டொலர்






இந்நாட்டினை லிபியன் மக்கள் சோசலிச அரபுக்குடியரசு எனவும் அழைப்பர். லிபியா சகாராப் பாலை வனத்திற்கு அருகில் அமைந்துள்ளது. தொழில் வளர்ச்சி குறைவாக இங்கு காணப்படுகிறது. கல்வி வளர்ச்சியின் வேகமும் பிறநாடுகளுடன் ஒப்பிடும் பொழுது குறைவாக உள்ளது 1951 ஆம் ஆண்டு இந்நாடு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அணிசேரா இயக்க நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.







நாட்டின் பெயர் — வங்காளதேசம்
BANGALA DASH
தலை நகரம் — டாக்கா
வாழும் இன மக்கள் — வங்காளியர்.
மக்கள் தொகை — 95 மில்லியன்
அரச மொழி — வங்காளி
பிற மொழி — ஆங்கிலம்
நாணயம் — டங்கா
சமயம் — இஸ்லாம், இந்து
உற்பத்திகள் — சணல், கோதுமை, நெல்
பொருட்கள்
தலா வருமானம் — 130 அமெ.டொலர்


கிழக்குப் பாகிஸ்தான் என முன்பு அழைக்கப்பட்ட இந்நாடு பிரித்தானியர் ஆட்சியில் இந்தியாவின் ஒரு அங்கமாக விளங்கியது இப்பொழுது தனிநாடாக விளங்குகிறது. விவசாய நாடான இங்கு தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. இதனை வங்காளதேச மக்கள் குடியரசென அழைப்பர். பிறநாடுகளுக்கு சணல் மீன் போன்றவற்றை ஏற்று மதி செய்வது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பெயர் — வியட்நாம் VIETNAM
தலைநகரம் — கனோய்
வாழும் இன மக்கள் — வியட்நாமியர், கம்போடியர்
மக்கள் தொகை — 59 மில்லியன்
அரசமொழி — வியட்நாம்
பிறமொழிகள் — பிரான்ஸ், சீனம்
நாணயம் — டோங்
சமயம் — பௌத்தம், கத்தோலிக்கம்
உற்பத்திகள் — இறப்பர், மின்பொருட்கள்
மரப்பொருட்கள்
தலா வருமானம் — 245 அமெ. டொலர்





இந்நாட்டினை வியட்நாம் சோசலீசக் குடியரசு எனவும் அழைப்பர். 1940 தொடக்கம் 1970 வரை வடக்குத்தெற்கு என இரு பிரிவாகப்பிரிந்து உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்தது. 4000 ஆண்டுகள் சரித்திரம் படைத்த இந்நாடு இப்பொழுது பொதுவுடமை நாடாகும். பொது வுடமைக் கட்சி மட்டுமுள்ள இந்நாட்டில் தேசிய சபை மூலம் ஆட்சி நடக்கிறது.



நாட்டின் பெயர் — ருசியா (Soviet Union)
தலைநகரம் — மாஸ்கோ.
வாழும் இனங்கள் — ருசியர், உக்ரேனியர், உஸ்பெக்கியர்.
மக்கள் தொகை — 267 மில்லியன்.
அரச மொழி — ருசியா, சிலாவிக்.
நாணயம் — றூபிள்.
சமயம் — வைதீக திருச்சபை, இஸ்லாம்.
உற்பத்திகள் — கோதுமை, மின்பொருட்கள், இயந்திரவகைகள், இரும்பு, நிலக்கரி.
தலா வருமானம் — 4550 அமெரிக்க டொலர்.




சோவியத்து சமவுடமை குடியரசென இதனை அழைப்பர். கொடுங்கோலன் சார் மன்னன் ஆட்சியின் கொடுமை [illegible] வெடித்ததே ஒக்டோபர் புரட்சியாகும். இந்தப் புரட்சி [illegible] பொதுவுடமைநாடே இன்றைய சோவியத்து ருசியா [illegible] வல்லரசு நாடுகளில் ஒன்றான இங்கு ஏழைகளே [illegible]யென்று சொல்வார்கள். இப்பொழுது அரசியல்-[illegible]த் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண் [illegible]றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின்பெயர் — ஸ்பெயின்.
தலைநகரம் — மெற்றிட்.
வாழும் இனமக்கள் — ஸ்பானியர்.
மக்கள் தொகை — 39 மில்லியன்.
அரச மொழி — ஸ்பானியா.
நாணயம் — பெசெற்றா.
சமயம் — றோமன் கத்தோலிக்கம்.
உற்பத்திகள் — பழவகைகள்.
தலா வருமானம் — 535 அமெரிக்க டொலர்.



ஸ்பெயின் நாட்டில் மன்னரின் கீழ் பாராளுமன்ற ஆட்சியும் நடைபெறுகிறது. கடலோடிகளில் ஒருவரான கொலம்பஸ் பிறந்ததும் இந்நாட்டில்தான். பழி உற்பத்தியில் சிறந்து விளங்குவதால் பல நாடுகளுக்கு பழங்களா ஏற்று மதி செய்கிறது. உலகப் புகழ்பெற்ற விளையாட்டான மாட்டுச் சண்டை இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



# மாறிடும் விபரங்களைக் குறிக்குக

| நாடு | விடயம் | விபரம் | காலம் |
|---|---|---|---|
| ஜேர்மனி | இரு நாடுகள் | இணைந்தன | 1990 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. தெரு விளக்கு (கவிதைத் தொகுதி)

2. கவிக்குரல்கள் (இலங்கையில் வெளிவந்த முதலாவது ஒலிப்பதிவு நாடா கவிதை நூல்)

3. முன்னுரைக்கு ஒரு நூல். (ஒலிப்பதிவு நாடா நூல் — தாயாரிப்பில்)

4. பாலர்பாட்டு (அச்சில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இவர்

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சு. துரைசிங்கம், நல்ல ஆசிரியர், திறமை நிறைந்த அதிபர்; தரமான தமிழ்க் கவிஞர். தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் கந்தரோடை சு. க. வித்தியாலயத்திலே தன் ஆசிரியப் பணியைத் தொடங்கினார்; பொகவந்தலாவை கம்பளை, மயிலணி ஆகிய இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றி, கடுகண்ணாவை கனிஷ்ட வித்தியாலயம், குளவிசுட்டான் கனிஷ்ட ம. வி ஆகியவற்றில் அதிபராகி, இப்போது கதுமலை வடக்கு த. க. வித்தியாசாலையில் அதிபராகப் பணிபுரிகின்றார். இளம் எழுத்தாளர் சங்க ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவரான இவருடைய தெருவிளக்கு (கவிதைத் தொகுதி), கவிக்குரல்கள் (ஒலிப்பதிவுக் கவிதை) ஆகியவை இலக்கிய அபிமானிகளின் பாராட்டைப் பெற்றுள்ளன. "ஐம்பது நாடுகளை அறியுங்கள்" என்ற இந்நூல், இக்கால மாணவர்களின் இன்றியமையாத் தேவையொன்றைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்கின்றது

—சிற்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org